திரு. கோவைத்தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, வரும் உள்ளாட்சித் தேர்தலில் அடையாள அட்டைகள் பயன் படுத்தப் போவதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார் கள். இந்தக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதிதாக வாக் களிக்கும் முறையைத் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் கண்டு பிடித்திருக்கிறார். அது பொருட்காட்சியிலே கூட வைக்கப் பட்டிருக்கிறது. அந்த முறையைத் தமிழ் நாட்டிலே பயன்படுத்து வதற்கு முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இயந்திரத்தின் மூல மாக வாக்களிக்கின்ற முறையை திரு. ஹனீபா என்பவர் கண்டு பிடித்திருக்கிறார், அதைப் பொருட்காட்சியிலே ஸ்டாலிலே வைத் திருக்கிறார். இவைகளை எல்லாம் அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

(2) உரிமைப் பிரச்சினைகள்

(அ) பேரவை உறுப்பினரைக் காவல் துறையினர் தாக்கியதாகச் சொல்லப் பெறுவது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. நா. சுந்தர ராஜ் அவர்கள் 1981-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29-ஆம் நாள் பேரவையில் எழுப்பிய உரிமைப் பிரச்சினை மீது எனது தீர்ப்பை வழங்குகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் அவர்கள் ஜனவரி திங்கள் 24-ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 246-ன் கீழ், கீழ்க் கண்ட உரிமைப் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்தார் கள். அறிவிப்பில் தெரிவித்துள்ள தகவல்களுக்கு உறுப்பினர் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்கிறார்களா என்று அறியும் பொருட்டு, எனது ஆணைக்கு ஏற்ப பேரவைத் துறையிலிருந்து உறுப்பினருக்கு 1981-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27-ஆம் நாளன்று கடிதம் ஒன்று அனுப்பப் பெற்றது. ஆனால் அவ்வாறு உறுப்பினரைக் கேட்பது சரியல்ல. உறுப்பினர்கள் கொடுக்கும் அறிவிப்புகள் எல்லாம் அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டு

தான் கொடுக்கிறார்கள் என்று பேரவையில் கருத்து தெரிவித்த தன் பேரில் அப்பிரச்சினையை 1981-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29-ஆம் நாளன்று பேரவையில் எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. திரு. நா. சுந்தரராஜ் அவர்கள் பேரவையில் இதுகுறித்துப் பேசுகையில் :—

'' திரு. வி. இராஜசேகரன் அவர்கள் அக்டோபர் திங்கள் 14-ஆம் நாள் தன்னுடைய தொகுதியாகிய ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் கடலரிப்பு ஏற்பட்டு, அதனால் குடிசைகள் அழிந்ததன் காரணமாக ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து சமபந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் சந்தித்து நிவாரணம் காண வேண்டுமென்று அவர்கள் நடந்து செல்கையில் காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகளால் தாக்கப்பட்டு அதனால் அவர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.'' 'என்றும் சட்டப் பேரவையில் திரு. இராஜசேகரன் அவர்கள் ஆற்றிய உரை யின் காரணமாக அவரைப் பழி வாங்க வேண்டுமென்ற தவறான கெட்ட எண்ணத்தோடு அந்தப் பகுதி காவல் துறையினர் ஈடு பட்டுள்ளார்கள் என்றும் கூறியுள்ளார். ஆனால் இதுபற்றி எந்த விதமான ஆதாரமும் தரப்படவில்லை.

சென்னை நகரக் காவல் சட்டத்தின் 41-வது பிரிவின் கீழ் அமலில் இருந்த தடை உத்திரவை மீறியதற்காகவும், சாலையின் குறுக்கே படுத்துப் போக்குவரத்துக்குத் தடை செய்ததற்காக வும், தடையை நீக்க வந்த காவல் துறையினரைத் தடுத்துக் கலவரம் ஏற்படக் காரணமாயிருந்ததாலும் திரு. இராஜசேகரன் கைது செய்யப்பட்டுப் பின்னர் ஜாமீனில் விடப்பட்டார் என்றும் அரசுத் தரப்பில் விவரங்களுடன் விளக்கப்பட்டது. மேலும் இது குறித்து வழக்கு விசாரணை முடிந்து விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

[முற்பகல் 10-20]

பேரவையின் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கைது செய்யப் பட்டால் அது குறித்து பேரவைத் தலைவருக்கு உடனே தகவல் தெரிவிக்க வேண்டும் என்பது நமது பேரவையின் 314-ஆவது விதி. அப்படியே முறையாகத் தகவல் தெரிவிக்கப் பெற்றுள்ளது. எனவே, இதில் விதிமுறைகள் மீறப்படவில்லை.

உறுப்பினர் திரு. நா. சுந்தரராஜ் அவர்களின் அறிவிப்பில் கொடுக்கப் பெற்றுள்ள தகவல்களும், அமைச்சரால் பேரவைக்குக் கொடுக்கப் பெற்றுள்ள தகவல்களும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறாக உள்ளன. உறுப்பினர் தனது அறிவிப்பில் கூறியதற்கு சரியான ஆதாரங்கள் எதுவும் கொடுக்கவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தனது தொகுதி சம்பந்தமாக உறுப்பினர்கள் பிரச்சினைகளை, சம்பந்தப்பட்ட அலுவலர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவது உறுப்பினர்கள் தொகுதிக்கு ஆற்ற வேண்டிய கடமையாகும். எனினும் அவ்வாறு செயல்படும்போது உறுப்பினர்கள் அமலில் உள்ள 'சிவில்' மற்றும் 'கிரிமினல்' சட்டங்களுக்கு உட்பட்டுத்தான் பணியாற்ற வேண்டும். அவ்வாறின்றி உறுப்பினர்கள் குற்ற இயல் சட்டங்களுக்குப் புறம்பாக ஏதேனும் செயல்புரிந்து அதற்காக அவர்கள் தடுக்கப்பட்டாலோ, நடவடிக்கை தொடரப்பட்டாலோ, அல்லது தண்டிக்கப்பட்டாலோ அது பேரவையின் உரிமையை மீறியதாகவோ அல்லது பேரவையை அவமதித்ததாகவோ அமையாது.

மேலும் திரு. இராஜசேகரன் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதால் அவ்வழக்கு நீதி மன்றத்தில் விசாரிக்கப் பெறும்போது தான் எது சரியான தகவல் என்பது தெரியவரும்.

எனவே, எழுப்பப்பெற்றுள்ள பிரச்சினையில் மேலெழுந்த வாரியாகப் பார்க்கையில்கூட அவை உரிமை மீறல் எழவில்லை எனத் தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) ஊரகத் தொழில் அமைச்சர் மீது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் 1981-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 29-ஆம் நாளன்று உறுப்பினர் திரு. நா. சுந்தரராஜ் அவர்கள் எழுப்பிய உரிமை மீறல் பிரச்சினைக்கு அளித்த தகவல்கள் குறித்து உறுப்பினர் திரு. இராஜசேகரன் அவர்கள் ஒரு. உரிமை மீறல் பிரச்சினைக்குப் பேரவையின் 246-ஆவது விதியின் கீழ் அறிவிப்புக் கொடுத்திருந்தார். இது பேரவையில 1981-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10-ஆம் நாளன்று எடுத்துக் கொள்ளப் பெற்றது. திரு. இராஜசேகரன் அவர்கள் இப்பிரச்சினை குறித்து விவரங்களை அளித்துள்ளார். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும் இது குறித்து விவரங்களைத் தந்துள்ளார்.

தாம் கைது செய்யப்பட்டது குறித்தும், மருத்துவமனையில் தமக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த தகவல்கள் தவறானவை என்று குறிப்பிட்டு, எனவே அவை உரிமை மீறல் ஏற்பட்டுள்ளது என்று திரு. இராஜசேகரன் அவர்கள் கூறினார்கள்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அளித்த தகவலில், இந்த நிகழ்ச்சி, பேரவைக்கு வெளியிலே நடைபெற்றுள்ளது என்றும், அது தொடர்பானவற்றை காவல் துறையினரைக் கேட்டபோது அவர்கள் அளித்த தகவலைத்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார்கள் என்றும் திரு. இராஜசேகரன்